## 28.14 உயர்நிலைக் குழு அறிக்கை – உள்ளாட்சி சம்ம்ந்தமாக வெளியிடப்படும் சட்ட திட்டங்கள் மற்றும் அரசாணைகள் – தமிழ்மொழியில் உருவாக்குதல்

ஊரக வளர்ச்சி (சி4) துறை

அரசாணை எண் : 109

நாள் : 25.6.1999

படிக்க :

1. அரசு ஆணை (நிலை) எண் 320 ஊரக வளர்ச்சி துறை நாள் 11.11.97.
2. அரசு ஆணை (நிலை) எண் 78 ஊரக வளர்ச்சி துறை நாள் 28.4.98.
3. பொதுத்துறை கடித எண் 2147 பொது –1/98–6. நாள் 15.2.99.

**ஆணை**

இந்திய அரசியலமைப்பு சட்டம் அட்டவணை II ல் மாநில அரசுகள் உள்ளாட்சி அமைப்புகளுக்கு உரிமைகள் பொறுப்புகள் மற்றும் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்க வேண்டிய 29 பொருள்கள் என்னென்னவென்று குறிப்பிடப்பட்டுள்ளன, அதன்படி படிப்படியாக மாநில திட்டக் குழுவின் பரிந்துரைகளை ஏற்று மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு உரிமைகள். பொறுப்புகள் மற்றும் அதிகாரங்கள் சிறுபாசனம் சிறுகாடுகள் மற்றும் வன உற்பத்தி பொருட்கள் பாதுகாப்பு ஆகிவற்றை தவிர பிற இனங்கள் மீது ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளன, மேலும் மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு கூடுதல் அதிகாரங்கள் அளிக்க அரசுக்கு பரிந்துரை செய்ய மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களை அமைப்பாளராகவும். சட்டமன்றத்தில் இடம் பெற்றுள்ள அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதிகளை உறுப்பினர்களாகக் கொண்டும் உயர்நிலைக் குழு அமைத்து பார்வை ஒன்று மற்றும் இரண்டில் படிக்கப்பட்ட அரசு ஆணையில் ஆணை வெளியிடப்பட்டன. உயர்லைக்குழு தனது அறிக்கையை அரசுக்கு 11.1.99 அன்று சமர்ப்பித்தது.

2. உயர்நிலக் குழுவின் அறிக்கையில் இயல் IIல் பரிந்துறை எண் 42 பின்வருமாறு

**பரிந்துரை எண் 42**

உள்ளாட்சி செயல்பாடுகளுக்கு எளிமையான மக்கள் புரிந்துகொள்ளக் கூடியவகையில் தமிழ் மொழியில் சட்டத்திட்டங்களை உருவாக்கிட வேண்டும்.

3.உயர்நிலைக்குழு அறிகையிலுள்ள பரிந்துரைகள் அரசு ஏற்பது குறித்து முடிவு செய்ய 3.5.99 மற்றும் 4.5.99 அகீய நாட்களில் கூடிய அமைச்சரவை கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவிற்கேற்ப உயர்நிலைக் குழுவின் அறிக்கை இயல்–2 பரிந்துரை எண்42 மீது கீழ்க்கண்டவாறு ஆணையிடப்படுகிறது.

உள்ளாட்சி செயல்பாடுகளை எளிமையாக மக்கள் புரிந்து கொள்ளும் வகையில் உள்ளாட்சி சம்மந்தமாக வெளியிடப்படும் சட்ட திட்டங்கள் மற்றும் அரசு ஆணைகள் அனைத்தும் தமிழ் மொழியில் வெளியிட அனைத்து துறை செயலாளர்களும் மற்றும் துறை தலைவர்களும் கேட்டுகொள்ளப்படுகிறார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரமேஷ் சந்திர பண்டா**
அரசு செயலாளர்